# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2055/1 - 2018 ජනවාරි මස 22 වැනි සඳුදා - 2018.01.22

2055/1 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், வெலிவிட்டிய திவிதுறை பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய நுகே தொட்ட கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளர் அதிபதியின் ஆ.வ.ப. இல. கா 3734 இல் தெளிவாகக் காட்டப்படும் 1, 2 ஆம் இலக்கமுடைய இரு காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: பொல்கஹவில குறுப் துந்து தூவ; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டடங்கள் 42 உள்ளன; விஸ்தீரணம்: 1.9609 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: கொஹில தெனிய கும்புர; விபரம்: தரிசு நிலம்; விஸ்தீரணம்: 0.0912 ஹெக்ட யார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். ஏ. யூ. ஜீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
வெலிவிடிய - திவிதுறை.

பிரதேச செயலகம்,
வெலிவிடிய - திவிதுறை,
2018, சனவரி 12.

2 - 213

1A - G 26971 — 17 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*